முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை
OS.NO. 28/2024

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | : | 2 |
| பெயர் | : | ஜான்பிரிட்டோ |
| தகப்பனார் பெயர் | : | சாமிநாதன் |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ம் நாள் வியாழக்கிழமை திருமதி.K.அறிவொளி.எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல்விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 2-வது சாட்சியாவேன். வழக்கு பற்றி எனக்கு நன்கு தெரியும். எனது தரப்பு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். இங்கு என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள புரோநோட்டில் உள்ள வாசகங்களை எழுதியது நான் தான். மேற்படி புரோநோட்டில் உள்ள எழுதியதும் சாட்சியமுமான என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புரோநோட்டு ஏற்கனவே வா.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

புரோநோட்டில் எழுதியுள்ள சங்கதிகள் தமிழிலும் என் கையொப்பத்திற்கு கீழ் S/o. Saminathan, Kalayarkovil என்பது ஆங்கிலத்திலும் என்னால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தற்போது தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் நான்தான் எழுதி சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நிருபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு சரியாக தெரியாது என்றால் சரியல்ல. என் சாட்சிய நிருபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை வாதி சொல்லித்தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி புரோநோட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.10,00,000/- எந்த தேதியில் எங்கு வைத்து வாதி

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.10.28 15:01:16 +0530

பிரதிவாதியிடம் கொடுத்தார் என்பது குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே அவர்கள் இருவருக்குள்ளும் வரவு, செலவு இருந்ததால் அதை குறிப்பிட்டு நான் சொல்லவில்லை. புரோநோட் எழுதியது அன்று புரோநோட்டிற்காக பணம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். புரோநோட் எழுதுவதற்கு முன்னரே வாதி, பிரதிவாதிக்கு பணம் பரிவர்த்தனைகள் இருந்ததால் அதை பற்றி நான் குறிப்பிட்டு என் நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை. தாவா புரோநோட்டில் சொல்லப்பட்டுள்ள தொகை 2010ம் வருடம் காசோலை மூலம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட தொகை என்றால் எந்த வருடம் என்று எனக்கு தெரியாது. ஆனால் காசோலை மூலம் கொடுக்கப்பட்ட தொகைக்காகத்தான் எழுதப்பட்டது. 10வருடத்திற்கு முன்னால் ரூ.10,00,000/- கொடுக்கப்பட்டதற்காகத்தான் புரோநோட் எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் சொல்லப்பட்டுள்ள தொகை 2010ம் வருடம் காசோலை மூலம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட தொகை என்று புரோநோட்டில் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். 2013ம் வருடம் ஜனவரி மாதம் வாதி பிரதிவாதி மற்றும் அர்ச்சசுனன் ஆகியோர் சேர்ந்து வாங்கிய இடத்தை பிரதிவாதி மற்றும் அர்ச்சுனனிடமிருந்து வாதி பெயரில் எழுதி வாங்கிக்கொண்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2013ம் வருடம் ஜூன் மாதம் பிரதிவாதியிடமிருந்து மாதாநகரில் ஒரு சொத்தை வாதி எழுதி வாங்கிக்கொண்டது தெரியுமா என்றால் தெரியும். அதற்கான பணம் செட்டில்மெண்ட் செய்து எழுதிவாங்கிக்கொண்டார். அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். மேற்படி வாதி எழுதி வாங்கிக்கொண்ட இரண்டு இடங்களும் 2010ம் வருடம் கொடுக்கப்பட்ட காசோலை மூலம் கொடுத்த தொகைக்காக எழுதி வாங்கிக்கொண்டார் என்றால் சரியல்ல. வாதி பணம் கொடுத்துதான் மேற்படி கிரையம் பெற்றார். நானும் வாதி முனியசாமி என்பவரும் நீண்ட நாட்களாக ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. ஆனால் வாதியை தெரியுமா என்றால் அவர் என்னுடைய நண்பர் தான். சுமார் 20 வருடங்களுக்கு மேலாக தெரியும். மேற்படி நண்பர் என்ற அடிப்படையில் 2010ம் வருடம் பிரதிவாதியால் வாதிக்கு கொடுக்கப்பட்ட நிரப்பப்படாத புரோநோட்டை வைத்து பின்னிட்டு அதை நா ன் பூர்த்தி செய்து புரோநோட் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புரோநோட்டில் சொல்லப்பட்ட தேதியில் அதில் சொல்லப்பட்டுள்ள

தொகையை வாதியிடமிருந்து பிரதிவாதி பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியலல. வாதி என்னுடைய நீண்டகால நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.10.28 15:01:22 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை